# ஹிந்தி எதிர்ப்புத் தலைவர்கள் கைது.

## திருச்சியில் கண்டனக் கூட்டம்.

### கான்கபகதூர் கலிபுல்லா வீரவுரை.

## பொதுமக்கள் ஆத்திரம்.

(நமது நிருபர்)

திருச்சி, ஜூன். 6.

நேற்று மாலை 6 மணிக்கு திருச்சி டவுன்ஹாலில் காங்கரஸ் மந்திரிகள் ஹிந்தி எதிர்ப்பு வீரர்களைக் கைது செய்ததைகண்டிக்கும்பொருட்டு, மாஜி மந்திரிகான் பகதூர் கலிபுல்லா சாகிப் எம். ஏ., பி. எல்., எம். எல். ஏ. அவர்களின் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. சுமார் 2000 மக்கள் கூடியிருந்தனர். முதலில் இரு தோழர்கள் ஹிந்திஎதிர்ப்புக் கீதங்கள் பாடினர். பிறகு தலைவர் அவர்கள மந்திரிகள் செய்த அடாத செய்கைகளைப் பற்றியும், வரிப்பளுவைக் குறைக்கிறோம் என்று சொல்லி, புதுப் புது வரிகளை விதிப்பதைப் பற்றியும், பொது ஜனங்களுக்கு நன்மையான காரியங்கள் செய்யாமல், தீமையான காரியங்களே செய்து வருவதையும் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச்சொன்னார்கள்.

ஹிந்தியால் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் வரும் கெடுதல்களைப் பற்றி விரிவாகச் சொல்லிவிட்டு, தான் ஜவஹருக்கு எழுதிய பதில் கடிதத்தை 'ஹிந்து' பத்திரிக்கைக்கு அனுப்பி பிரசுரிக்கச் சொன்ன போது அது கண்ணையும், மூக்கையும் கிள்ளி விட்டு பிரசுரிக்கிறேன் என்று சொன்னதையும், தான் அதை ஒப்புக் கொள்ள வில்லை என்றும், வட இந்தியாவில் உள்ள பத்திரிக்கைகள் எல்லாம முழுதும் பிரசுரித்த தென்றும், ஹிந்து பத்திரிக்கையின் வகுப்பு வாதத்தை எடுத்துக் காட்டினார். ஜவஹரிடமிருந்து இன்னும் தான் விடுத்த சவாலுக்குப் பதில் வரவில்லை என்றும், மெயில் பத்திரிகை ஜகதீசன் உண்ணாவிரதத்தைப் பற்றி எழுதும்போது அது தற்கொலைக்கு ஒப்பாகுமென்றும், எழுதியதையும் சென்னைத் தமிழ்ப் பத்திரிக்கைகள் ஜகதீசனின் உண்ணாவிரதத்தைப் பற்றி ஒருவரி கூட இவ்வளவு நாளாக எழுதாமல் இன்றைக்கு தலைவர்கள் கைதியானதைப்பற்றி மாத்திரம் பிரசுரித்ததைப்பற்றியும் கண்டித்துப்பேசினார்.

முன்பு கிரிமினல் ஆக்டையே ஒழித்து விடவேண்டுமென்று இந்த மந்திரிகளும் காங்கரஸ்காரர்களும் சொல்லிவிட்டு இப்பொழுது அதையே எதிரிகளின் மேல் பிரயோகம் செய்வது எவ்வளவு அடாத செய்கை என்றும், அப்பொழுது வடித்தது நீலிக்கண்ணீரா, முதலைக்கண்ணீரா, அல்லது பாமரமக்களை ஏமாற்றி ஓட்டுப் பறிக்கச் செய்த பொய்ப் பிரசாரமா என்று கேட்டார். காந்தியார் இந்த உண்ணாவிரதத்தைப் பற்றி இரண்டு மடங்கு பலாத்காரத்தை உண்டாக்கும் என்று சொன்னதைப் பற்றி சொல்லி இவர் எப்படி ஆதிதிராவிடர்களை ஏமாற்றினார் என்றும், காந்தியார் உயிரும், ஜகதீஸன் உயிர், பார்ப்பான் உயிர் பறையன் உயிர் எல்லாம் கடவுளால் படைத்தவை என்றும் ஆதலால் எல்லா உயிரும் ஒன்று என்றும் இதில் வித்தியாசமில்லை என்றும், சொன்னார். இவர்கள் பேச்சுச் சுதந்திரம், வாக்குச் சுதந்திரம் வேண்டுமென்று சொன்னார்களே. அதற்கு என்ன அர்த்தம் என்பதும் தனக்குப் புரியவில்லை என்றும் சொன்னார். ஒரு தோழர் கேட்ட கேள்விக்கு ஆணித்தரமாக பதில் சொன்னார். சுமார் இரண்டு மணி நேரம் பேசினார்.

விருது நகரிலிருந்து சென்னைக்குப் போக "தொண்டர்கள் வந்தவர்கள் திருச்சியில் தங்கினார்கள். அவர்களில் வீரையன் என்பவர் பேசினார். அவர் ஹிந்தியால் தமிழுக்கு ஏற்படும் இன்னல்களைப் பற்றியும், ஆரியருக்கு அடிமைப்படுத்தும் முறையைப் பற்றியும் ஆதலால் தாங்கள் சத்தியாக்கிரகம் செய்யவே சென்னைக்குப் போவதாகவும் உணர்ச்சி ததும்ப பேசினார். பிறகு தோழர் லெச்சுமணையா ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவந்தார். 'இப்பொதுக்கூட்டம் சர்க்கார் ஹிந்தி எதிர்ப்பு தலைவர்களை கைது செய்த செய்கையை வன்மையாகக் கண்டிக்கிறது'' என்ற தீர்மானத்தை பிரேரேபித்த போது சுமார் 500 தொண்டர்கள் வரை இங்கு இருக்கிறார்களென்றும் இன்னும் 1000 தொண்டர்கள் சேரவேண்டுமென்றும், பொருளுதவி செய்யவேண்டுமென்றும், சீரங்கம் முனிசிபல் ஹைஸ்கூலில் சத்தியாக்கிரகம் செய்யவேண்டியதைப் பற்றியும், சென்னைப் பார்ப்பனப் பத்திரிக்கைகள்கட்டுப் பாடாக இந்த எதிர்ப்பை மறைத்து வருவதைப் பற்றியும், அவைகளை எல்லாம் பகிஷ்காரம் செய்யவேண்டுமென்றும், விரிவாகப் பேசிமுடித்தார்.

பிறகு தோழர் வக்கீல் வேதாசலம் அவர்கள் அத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்.

தலைவர் முடிவுரையில் தீர்மானத்தைப் பற்றிபேசி, நம் வீட்டிற்குள் ஒருதிருடன் வந்தால் நாம் எப்படி விரட்டுவோமோ அதுமாதிரி இந்த கட்டாய ஹிந்தியை எல்லாவகையிலும் எதிர்த்து விலக்க வேண்டுமென்று சொல்லி, தீர்மானத்தை எல்லாரும் ஆதரிக்கத் தெரிவிக்கும்படி தெரிவித்தார். எல்லாரும் கரகோஷம் செய்தார்கள். எதிராக உள்ளவர்களை கைஉயர்த்தும்படி கேட்டுக்கொண்டார். ஒருவரும் உயர்த்தவில்லை. ஆதலால் தீர்மானம் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது கூட்டம் வந்தனோபசாரம் சொல்ல இனிது முடிந்தது.

பிறகு ஒரு ஊர்வலம் அங்கிருந்து புறப்பட்டு மணிக்கூண்டு வழியாக, பாலக்கரை இடைத்தெருவு வரைக்கும் ஹிந்தி ஒழிக, தமிழ் வாழ்க, நாயகம் பொன்னுசாமி, சுவாமி ஷண்முகத்துக்கு ஜே'' ஆச்சாரியார் அழிக அக்கிரகார மந்திரிசபை ஒழிக என்ற கோஷத்துடன் ஸ்டாலின் ஜெகதீஸன் உண்ணாவிரத நாளை அட்டையில் ஒட்டி கொடிகளுடன் கூட்டம் சுமார் 200 பேர்களுடன் போனார்கள்.

**ஸ்டாலின் ஜெகதீசன்**

**உண்ணாவிரதம் இன்றைக்கு 38ம் நாள்**

**எஸ். டி.**

இன்றே பரீக்ஷியுங்கள்.